செய்தி வெளியீடு எண்:253 நாள்: 09.06.2021

# செய்தி வெளியீடு

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, ஆளுநர் உரை நிகழ்த்தும் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடர் குறித்து கலந்தாலோசிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.6.2021) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களை ஆளுநர் மாளிகையில் நேரில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது மாண்புமிகு ஆளுநர் அவர்கள், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சரும் அவை முன்னவருமான திரு. துரைமுருகன் அவர்கள், தமிழ்நாடு தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9